அம்பத்துார்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 540/2015

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு  மார்ச் திங்கள் 06–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 06.03.2026 |
| பெயர் சங்கீதா | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

1. வழக்கு  தாக்கல்  செய்தபிறகு தாவா சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் போட்டுபார்த்தேனா என்றால் பார்த்தேன். யார் பெயரில் சொத்து இருந்தது என்றால் என்பெயரில். அந்த வில்லங்கசான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் 06.03.2026 தேதியிட்ட வில்லங்க சான்றிதழில் பிரதிவாதி பெயரில் காட்டப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது ஆனால் நான் அதை மறுக்கிறேன்.

2.என்பெயரில் உள்ள பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் கூறியவாறு என்பெயரில் பட்டா இல்லை என்றாலும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் பட்டாவில் பிரதிவாதி பெயர் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தற்போது தேதியில் தாவா சொத்தில்EB கணைக்சன் உள்ளதா என்றால் இல்லை. தற்போது தேதிவரை பிரதிவாதி பெயரில் தான் மின்இணைப்பு உள்ளது என்றாலும் 2017 தேதிவரை பிரதிவாதிதான் மின்கட்டணம் செலுத்தினார் என்றாலும் சரியல்ல.

3. தாவா சொத்தில் நான் அத்துமீறி நுழைந்துள்ளேன் என்றாலும் அது பிரதிவாதி இடம் என்றாலும் சரியல்ல. நான் தான் செட்போட்டு வீட்டில் உள்ளேன். தற்சமயம் தாவா சொத்தில் ஆஸ்பட்டாஸ் சீட் போட்ட வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேனா என்றால் ஆமாம். கடந்த 15 வருடங்களாக தாவா சொத்தில் தான் வசித்துவருகிறேன். நான் தாவா சொத்தில் இல்லை என்றாலும் தாவா சொத்திற்கு எதிரே உள்ள வீட்டில் தான் நான் வாடகைக்கு இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தின் மூலம் ஆணையர் நியமித்து வழக்கு சொத்தில் உள்ள நிலவரம் தெரிந்துகொள்ளமுடியும் என்றால் சரிதான். நான் மனு செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

4. தாவா சொத்தில் உள்ள செட்போட்ட வீடு பூட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தான் வசித்து வருகிறேன். எனது பிராதில் எனது மாமனார் பூர்விக சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றாலும் எனது மாமனாருக்கு எத்தனை வருடமாக அந்த பூர்விகம் உள்ளது என்றால் வருடம் சரியாக ஞாபகம் இல்லை. எதற்காக பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதிதாவா சொத்தில் பிரச்சணை செய்தார். எனவே வழக்கு தாக்கல் செய்தோம். தாவா சொத்தில் தற்சமயம் மாடு மற்றும் ஆடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் நான் வளர்க்கிறேன்.

5. பிரதிவாதி நான் வசிக்கும் ஏரியாவில் உள்ளார் என்றால் சரிதான்.

பிரதிவாதிக்கு தாவா சொத்து பூர்விகமாக கிடைக்கப்பட்டு அனுபவித்து வருகிறார் என்றாலும் நான் தான் அத்துமீறி நுழைந்து பிரதிவாதியின் அனுபவத்தை இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை அனுபவித்து வருவதை காட்டும் வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கை நான் நிருப்பிக்கவில்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் ◌் சரியல்ல. இன்றைய தேதிவரை பிரதிவாதி பெயரில் தான் தாவா சொத்து பட்டா, சிட்டா, மற்றும் அடங்கல் மற்றும் மின்இணைப்பு உள்ளது என்றாலும் பிரதிவாதிதான் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.